**தேசிய விஞ்ஞான மன்றம் -2014**

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் காசுப் பாய்ச்சல் மற்றும் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் படி நிதி நிலைமைக் கூற்றில் சகல சொத்துக்களும் பொறுப்புக்களும் திரவத்தன்மை அடிப்படையிலான ஒழுங்கு முறையில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்தப்பட்ட ரூபா 4,822,697 தொகையான இடர்கடன் மீதி அறவிடல்களில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தை எடுக்கின்ற கடன் மீதிகளை இனங்கண்டு நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மானியங்களிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட கொள்கலன் அலுவலகக் கட்டிடத்திற்காக வருடாந்த பெறுமானத் தேய்வின் அளவு ரூபா 382,690 இற்காக காலக்கழிவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கிக் கணக்கிணக்கக்கூற்றில் காண்பிக்கப்பட்ட இனங்காணப்படாத நேரடி செலவு ரூபா 141,311 தொகை வருமானக்கூற்றில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலாவதியான ரூபா 789,649 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371(இ) | செயல்நிமித்த உப கட்டுநிதி அது வழங்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவுபெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 09 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 1,726,100 கூட்டுத்தொகையான முற்பணம் தீர்க்கப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 266,600 தொகையான முற்பணம் ஒருவருடத்திற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது காணப்பட்டது. |
| (ஆ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.1(அ) பிரிவு | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,040,000 பெறுமதியான 20 கணனிகளின் கொள்வனவிற்காக ஆகக் குறைந்தது 5 நிறுவனங்களிலிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மன்றத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 9,478,985 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 4,401,216 ஆக இருந்தது. அதன் படி மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 13,880,204 தொகையான முன்னேற்றத்தைக் காண்பித்தது. மீண்டெழும் மானியம் ரூபா 22,894,000 இனால் அதிகரித்தமை நிதி விளைவுகளின் மிகை தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மன்றத்தால் ரூபா 80,016,591 பெறுமதியான 54 ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 2014 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்ட முதன்மை மற்றும் விடய ஆராய்ச்சிகளில் தொழில்நுட்பத்தைக் கையளிப்பதற்காக 2 ஆராய்ச்சி அறிக்கைள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 9,700,000 தொகை வழங்கப்பட வேண்டிய போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 100,000 மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆராய்ச்சி செயற்திட்டங்களின் இறுதி அறிக்கை மதிப்பீட்டுக் குழுவொன்றின் மூலம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு சிபாரிசுகள் வழங்கப்படுவதுடன் அவ்வாறான அறிக்கைகள் தொடர்பில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆராய்ச்சிகளை பூர்த்திசெய்வதற்காகவும் பூர்த்திசெய்யப்பட்ட அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காகவும் அசாதாரண கால தாமதம் ஏற்பட்டமை.

(ii) இறுதி அறிக்கை குறிப்பிட்ட நியமங்களின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படாமை.

(iii) எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்பட்டிருக்காமை.

(iv) அறிக்கை வெற்றிகரமான அறிக்கையாக சிபாரிசு செய்யப்பட்ட போதிலும் ஆராய்ச்சி அறிக்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டமை.

(v) அறிக்கை மதிப்பிடப்பட்டதன் பின்னர் நாட்டிற்கு பயனுள்ளதாக ஈடுபடுத்துவதற்கு கவனம் செலுத்தாமை.

---

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

ஆராய்ச்சி உடன்படிக்கையின் படி, மானியமொன்றின் நடவடிக்கைகள் முடிவடைந்ததும் உடனடியாக மானிய நலனாளியினால் இறுதி அறிக்கையுடன் எஞ்சிய காசு மீதி தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 09 ஆராய்ச்சிகளுக்குரிய மானிய நலனாளிகளினால் ரூபா 2,798,134 கூட்டுத்தொகையான பணம் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.3 இனங்காணப்பட்ட நட்டம்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு 2006 சனவரி முதல் 2012 திசெம்பர் வரை பங்களிப்புப் பணம் குறைவாகச் செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 408,301 மிகைக்கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தின் முகாமைத்துவ தகவல் முறைமையை கணனிமயப்படுத்துவதற்காக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிப்பாடசாலையுடன் 2011 பெப்ரவரி 15 ஆந் திகதி ரூபா 2,999,000 பெறுமதியான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அச்செயற்பாடுகள் 2012 யூன் 14 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் அதற்காக ரூபா 1,157,100 தொகையான செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மன்றத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 9,132,365 பெறுமதியான உபகரண மானியம் வழங்கப்பட்டிருந்தது.

(i) மானியத்திற்குரிய உடன்படிக்கையின் படி உபகரணங்களைக் கொள்வனவு செய்ததன் பின்னர் அந்த நிறுவனத்தின் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு அதன் பிரதியொன்றும் பொருள் பெறுவனவுச் சீட்டின் பிரதியொன்றும் மன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் ரூபா 7,486,653 பெறுமதியான 05 உபகரண மானியங்கள் தொடர்பில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் உரிய நிறுவனத்திற்கும் வழங்குனருக்குமிடையே பராமரிப்பு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் 02 மானியங்கள் தொடர்பில் அவ்வாறான பராமரிப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(iii) செயல்முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் படி முதலாவது செயல்முன்னேற்ற அறிக்கை வழங்கப்பட்டு ஒரு வருட காலத்திற்குள் அனுப்பப்பட வேண்டிய போதிலும் 07 மானியங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டு நிலையில் காணப்படாத முறையே ரூபா 1,829,977 தொகை மற்றும் ரூபா 6,747,380 தொகையான Man & Biosphere Fund மற்றும் Scientific Reserve Fund என்ற 2 நிதியங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வங்கிக் கணக்கில் 04 மீதிகளின் ரூபா 5,798,120 கூட்டுத்தொகையான நிதியம் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை ரூபா 632 மில்லியன் தொகை நென்கோ தனியார் கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 19,050,909 தொகையான சாதாரண பங்குப் பத்திரங்களும் ரூபா 45,248,286 தொகையான முன்னுரிமைப் பங்குப்பத்திரங்களும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பெயரில் வழங்கப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 14 ஆந் திகதி பகிரங்கப்படுத்தப்பட்ட 1736/23 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் படி உரிய கம்பனி தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில்

முடிவடைந்த ஆண்டு வரையிலும் எவ்வித பிரதிபலனும் மன்றத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

**4.7 பதவியணியினர் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 திசெம்பர் 31 வரையில் 19 உத்தியோகத்தர்களில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 14 வெற்றிடங்கள் நிறைவேற்றுத் தரத்திற்குரிய பதவிகளாக இருந்தன.

(ii) மன்றத்தின் கணக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக ஏற்பட்ட நிருவாக பிரச்சினைகள் தொடர்பாக வெளிவாரி பரிசோதனை உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 2015 மார்ச் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் படி நடாத்தப்பட வேண்டிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

நிதி மற்றும் பௌதீக இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் செயல்நடவடிக்கைத்திட்டம் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் மன்றத்தால் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பௌதீக இலக்கு உள்ளடக்கப்படாமையின் காரணமாக பௌதீக செயலாற்றலை மதிப்பீட்டிற்கு உட்படுத்த முடியாதிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக்

கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துகள் கட்டுப்பாடு

(ஆ) இருப்புக் கட்டுப்பாடு